# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## ஆணை நாள் – 01.07.2026

**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 17405/A/2024

திரு.பொ.குணசேகரசெந்தில் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக
உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காங்கயம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம். --

பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர் /
தொழில் நுட்ப மேலாளர்,
மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை,
திருப்பூர் மாவட்டம்.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

<table>
<tr><td>மனுதாரர்</td><td>திரு.பொ.குணசேகரசெந்தில் அவர்கள்<br>ஆஜராகவில்லை</td></tr>
<tr><td colspan="2">தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது.</td></tr>
</table>

| | |
|---|---|
| பொது அதிகார அமைப்பு | திருமதி.த.மலர்<br>பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), திருப்பூர் அவர்கள் ஆஜராகவில்லை<br><br>தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 8(2)-ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது.<br><br>திரு.க.மாரிமுத்து,<br>துணை வட்டாட்சியர் / தலைமை உதவியாளர், ஆ பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் அவர்கள் ஆஜரானார்<br><br>திரு.மு.சுந்தரமூர்த்தி<br>பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காங்கயம் வட்டம். திருப்பூர் மாவட்டம் அவர்கள்<br><br>மற்றும்<br><br>திருமதி.கா.சீதாலட்சுமி,<br>பொதுத் தகவல் அலுவலர்/ தொழில்நுட்ப மேலாளர், மாவட்ட நில அளவை அலுவலகம், திருப்பூர்<br>நேரில் ஆஜரானார் |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 05.07.2023 |

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திரு. மாவட்ட வருவாய் அலுவலர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் உத்தரவு ப.மு.12201/2021/ஜே1, நாள். 09.05.2023 கோப்பில் உள்ள அனைத்து ஆவணங்களையும் (Note File உட்பட) உள்ளது உள்ளபடி நகலிட்டு சான்றொப்பமிட்டு வழங்கக் கோரியுள்ளார். மேலும் 11 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

| | |
|---|---|
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ---- |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 14.08.20234 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 03.10.2023 |

2. இன்றைய தின விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலரின் சார்பாக ஆஜரான திரு.க.மாரிமுத்து, துணை வட்டாட்சியர் / தலைமை உதவியாளர், ஆ பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ந.க.15148/2023/ஜே1, 07.07.2023 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலராலும், மூ.மு.18446/2023/ஜே1, 25.08.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலராலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக

ஆணையத்தில் தெரிவித்து, அவற்றின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் திரு.மு.சுந்தரமூர்த்தி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காங்கயம் வட்டம். திருப்பூர் அவர்கள் மனுதாரருக்கு ப.மு.2525/2023/அ6, 28.07.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத்தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என ஆணையத்தில் தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

4. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திருமதி.கா.சீதாலட்சுமி, பொதுத் தகவல் அலுவலர் / தொழில்நுட்ப மேலாளர், மாவட்ட நில அளவை அலுவலகம், திருப்பூர் அவர்கள், ஓ.மு.த.அ.உ.ச.ம.அ10/7374/ 2024, 08.10.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக வட்டசார் ஆய்வாளர், வட்ட அலுவலகம், காங்கேயம் அவர்களுக்கு மனு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. மனுதாரர், இன்றைய விசாரணைக்கு ஆஜராகி தனது கருத்துக்களை எடுத்துரைக்க தவறிய நிலையில், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவையும் பொதுத்தகவல் அலுவலர்களின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், பொதுத்தகவல் அலுவலர்களால் தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளது உறுதியாகிறது. மேலும், மனுதாரர் தகவல்களை பெற்றுக்கொண்டு அவரது மனநிறைவு கடிதத்தினையும் அளித்துள்ளார். எனவே, ***பொதுத்தகவல் அலுவலர்களால் அளிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும், மனுதாரர் தகவல்களை பெற்றுக்கொண்டு அளித்த மனநிறைவு கடிதத்தின் அடிப்படையிலும் இம்மேல்முறையீட்டு வழக்கின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்யப்பட்டு ஆணையத்தால் ஆணையிடப்படுகிறது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 17405/A/2023**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம் - 641 604.

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காங்கயம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம் - 638 701.

பொதுத் தகவல் அலுவலர் /
தொழில் நுட்ப மேலாளர்,
மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை,
திருப்பூர் மாவட்டம் - 641 604.

**<u>மனுதாரர்</u>**
திரு.பொ.குணசேகரசெந்தில்
268,கண்ணியங்கிணறு,
குட்டப்பாளையம் அஞ்சல்,
நத்தக்காடையூர் வழி,
காங்கயம் தாலுகா,
திருப்பூர் - 638 108.

Copy to file

KRM/PA 08.07.2026